DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

C C.No.94 /2018

Deposition of Witness : PW2

| Name | திருமதி.அருள்செல்வி | Taluk | |
|---|---|---|---|
| Husband's Name | திரு.சக்திவேல் | Caste | |
| Village | | Calling | |
| Age | | Religion | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 26.10.2023 | | | |

(Accused Present)

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.L. சந்திரசேகர்(Gr.I 379) அவர்கள் அடையாளம் காட்டினார்.

**சாட்சி மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

ஆஜர் எதிரி என் கணவரின் தம்பி ஆவார். நான் ஆஜர் எதிரியுடன் சமாதனம் ஆகிவிட்டேன். என்னை யார் அடித்தார்கள் என்று தெரியுமா என்றால் கூட்டமாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்று தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் என்னால் பேசமுடியாது என்பதால் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் என்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றார்களா என்றால் நான் மயக்க நிலையில் இருந்ததால் எனக்கு தெரியவில்லை. எதிரியின் நிலமும் எனது நிலமும் அருகே அருகே இல்லையென்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது ராஜலட்சுமி, ராஜேஸ்வரி ஆகியோர் உடன் இல்லை என்றால் சரிதான்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

நான் வழக்கு சம்மந்தமாக என் கொழுந்தனாரான ஆஜர் எதிரியுடன் சமாதனம் ஆகிவிட்டேன் என்று எனது குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணையின் போதும் எனது முதல் விசாரணையின் போதும் வழக்கு சம்பவம் பற்றியும் ,எதிரியை பற்றியும் சொல்லிவிட்டு தற்போது எனது முதல் விசாரணைக்கும் குறுக்கு விசாரணைக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆஜர் எதிரியுடன் வழக்கு சம்மந்தமாக சமாதனம் ஆகிவிட்டதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்த விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.